# கோவை முதல் பல்லடம் வரை கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பிரமாண்ட வரவேற்பு!




திருப்பூர் மாவட்டம் - பல்லடத்தில் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” கழக மேற்கு மண்டல மகளிர் அணி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேற்று (29.12.2025) கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## பல்லடத்தில் லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்ற

# ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ - தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் மாநாடு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி உரை – கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை!

**பல்லடம், டிச. 30 -**

**பல்லடத்தில் நேற்று (29.12.2025) கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ - தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் மாநாடு நடைபெற்றது. ஒன்றரை லட்சம் மகளிர் பங்கேற்ற இந்த மாநாட்டில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரை யாற்றினார்.**

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில்; கழகப் பொதுச்செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் - அமைச்சர் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, திருச்சி சிவா, எம்.பி., ஆ.இராசா, எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், எம்.பி., அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக மகளிர் அணிச் செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் முன்னிலையில் கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி, எம்.எல்.ஏ. வரவேற்பில்; நேற்று (29.12.2025 - திங்கட்கிழமை), மாலை 4.00 மணி அளவில், திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில், “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

இம்மாநாட்டினை அமைச்சர் பெருமக்களான சு.முத்துசாமி, மா.மதிவேந்தன், கயல்விழி செல்வராஜ் மற்றும் அரசுக் கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்டச் செயலாளர்கள் / பொறுப்பாளர்களான மேயர் என். தினேஷ்குமார், என்.நல்லசிவம், தோப்பு வெங்கடாசலம், தொ.அ.ரவி, தளபதி முருகேசன், துரை செந்தமிழ்ச்செல்வன், கே.எம்.ராஜு, கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி., கே.எஸ். மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே. ஈஸ்வரசாமி, கே.இ.பிரகாஷ், கணபதி ப.இராஜ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி.வெங்கடாசலம், பெ.இராமலிங்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாம சுந்தரி, இரா.மாணிக்கம் ஆகியோர் ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்தனர்.

நிறைவாக, திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர் திருப்பூர் க.செல்வராஜ், எம்.எல்.ஏ., நன்றியுரையாற்றினார்.

### முதல்வருக்கு உற்சாக வரவேற்பு!

முன்னதாக பல்லடத்தில் நடைபெற்ற தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாட்டில் பங்கேற்க மகளிர் அணி நிர்வாகிகளுக்கு அழைப்பு விடுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநாட்டில் பங்கேற்க நேற்று காலை கோவை வருகை தந்த முதலமைச்சருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

நீலகிரி, நாமக்கல், கோவை, ஈரோடு, கரூர், திருப்பூர் ஆகிய 6 மாவட்டங்களைச் சேர்ந்த 39 சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த ஒன்றரை லட்சம் மகளிரணி நிர்வாகிகள் மாநாட்டில் பங்கேற்றனர். இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் பெண்களுக்கு வழங்குவதற்காக மாநாட்டில் போடப்பட்டுள்ள ஒவ்வொரு இருக்கையிலும் 10 உணவுப் பொருட்கள் அடங்கிய சிற்றுண்டிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் மாநாட்டில் பங்கேற்பதற்காக சென்னையிலிருந்து புறப்பட்டு கோவை சென்றடைந்த திமுக தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சரும், மண்டல பொறுப்பாளருமான செந்தில்பாலாஜி, அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், கயல்விழி செல்வராஜ், உள்ளிட்டோர் முதலமைச்சரை வரவேற்றனர். தொடர்ந்து சாலையில் இருபுறமும் பல கிலோ மீட்டருக்கு திரண்டிருந்த திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் மேள தாளங்கள் முழங்க முதலமைச்சருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## கீழடியில் 11ஆம் கட்ட

# அகழாய்வு நடத்த - ஒன்றிய தொல்லியல்துறை அனுமதி!

*சிவகங்கை, டிச. 30 -*

கீழடியில் 11ஆம் கட்ட அகழாய்வு நடத்த ஒன்றிய அரசு அனுமதி வழங்கி உள்ளது. சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகேயுள்ள கீழடியில் 2,600 ஆண்டுகளுக்கு முற்பட்ட நகர நாகரிகம் இருந்தது கண்டறியப்பட்டது. அங்கு 2014ம் ஆண்டு முதல் இதுவரை 10 கட்ட அகழாய்வுப் பணிகள் நடத்தப்பட்டுள்ளன.

அதேபோல, அருகில் உள்ள கொந்தகை, அகரம்,மணலூர் உள்ளிட்ட இடங்களிலும் அகழாய்வுகள் நடைபெற்றன. இதுவரை நடைபெற்ற 10 கட்ட அகழாய்வுகளில் சுமார் 20,000க்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் கண்டறியப்பட்டன. இந்த தொல்பொருட்களை பொதுமக்கள் பார்வையிடும் வகையில், உலகத் தரம் வாய்ந்த கீழடிஅகழ் வைப்பகம் அமைக்கப்பட்டது. இதை தினமும் ஆயிரக்கணக்கானோர் பார்வையிட்டு வருகின்றனர்.

இதனிடையே கீழடியில் நடைபெற்ற 10ஆம் கட்ட அகழாய்வு குறித்த அறிக்கையை மத்திய அரசிடம் தமிழ்நாடு தொல்லியல் துறை சமர்ப்பித்தது. இதனையடுத்து கீழடியில் 11ஆம் கட்ட அகழாய்விற்கு ஒன்றிய தொல்லியல்துறை அனுமதி வழங்கியது. கீழடியில் இதுவரை 4 சதவீதத்திற்கும் குறைவான பரப்பளவே ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

11ஆம் கட்ட ஆய்வு மூலம் வைகை நதிக்கரை நாகரிகத்தின் எஞ்சிய ரகசியங்களை வெளிக்கொணரத் திட்டமிடப் பட்டுள்ளது.

கீழடி மட்டுமின்றி, அதனைச் சுற்றியுள்ள கொந்தகை, அகரம் மற்றும் மணலூர் ஆகிய பகுதிகளிலும் விரிவான ஆய்வுகள் தொடர வாய்ப்புள்ளது.

ஜனவரியில் திறந்த வெளி அருங்காட்சியகம் திறக்கப்பட்ட பிறகு 11 ஆம் கட்ட அகழாய்வு பணிகள் தொடங்கப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**கால்நடை மருத்துவத்துறை**
பொ. து. கா. ம. பி. ந. க. எண். அ2 / 0901 / 2025

**குறுகியகால மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

தலைமை கால்நடை அலுவலர் (கால்நடை மருத்துவத்துறை) அவர்களால் கீழ்க்கண்ட பணிகளுக்கு குறுகியகால மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கால்நடை மருத்துவத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் மையங்களுக்கு தேவைப்படும் மருந்துகளை வெளி நிறுவனம் மூலம் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் அளிக்க கோருதல் (4 ஒப்பங்கள்)

**பணியின் மதிப்பு ரூ.21.75 இலட்சங்கள் முதல் ரூ.49.80 இலட்சங்கள் வரை**
**முன்வைப்பு தொகை - மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **07.01.2026** அன்று மாலை **3.00** மணி வரை
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம்: **08.01.2026** அன்று மாலை **3.30** மணி

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.
செ.ம.தொ.இ / 6866 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **தலைமை கால்நடை மருத்துவர்**


## நெல்லை ‘பொருநை’ அருங்காட்சியகத்தை கடந்த

# 6 நாட்களில் - 40 ஆயிரம் பேர் பார்வையிட்டனர்!

*நெல்லை, டிச. 30 -*

நெல்லை பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைத்த 6 நாட்களில் இதுவரை 38,950 பேர் பார்வையிட்டுள்ளதாக தகவல் தெரிவித்துள்ளனர். கடந்த 23ஆம் தேதி திருநெல்வேலி மாவட்டம் ரெட்டியார்பட்டியில் தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த அருங்காட்சியகத்தை திறந்து வைத்திருந்தார்.

தமிழகத்தின் தொன்மையான வரலாற்றை உலகறிய செய்யும் வகையில் கொற்கை, ஆதிச்சநல்லூர், சிவகளை ஆகிய இடங்களில் கிடைத்த தொல்பொருட்களை காட்சிப்படுத்துவதற்கு நெல்லை ரெட்டியார்பட்டி நான்கு வழிச்சாலை அருகே மலைச்சாலையில் பொருநை அருங்காட்சியகம் அமைக்க தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 18.5.2023 அன்று அடிக்கல் நாட்டினார்.

இதையடுத்து பொதுப் பணித்துறை சார்பில் ரூ.56.60 கோடி செலவில் 7 கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது.

இதில் ஆதிச்சநல்லூருக்கு ஏ, பி என 2 கட்டிடங்கள் 16,486 சதுர அடியில், தரைதளம் மற்றும் முதல் தளமாக கட்டப்பட்டுள்ளது. சிவகளை கட்டிடம் 8,991 சதுர அடியில் தரைதளம், முதல் தளமாக அமைக்கப்பட்டு உள்ளது. இதேபோல் கொற்கை பகுதி ஏ, பி என 2 கட்டிடங்கள் 17,429 சதுர அடியில் தரைதளம், முதல் தளத்துடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், ஒவ்வொரு கட்டிடத்திற்கும் இணைப்பு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. செல்லும் பாதையில் அழகு நிறைந்த குளம், குளத்தின் மீது பாலம், பூங்காக்கள், வண்ண விளக்குகள், நீரூற்று அமைக்கப் பட்டுள்ளன.

## சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில்

# புலிகள் கணக்கெடுப்பு!

ஈரோடு, டிச. 30 –

சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் உள்ள 10 வனச்சரகங்களில் நேற்று முதல் 5 நாட்களுக்கு புலிகள் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. வன விலங்கு களின் நடமாட்டம், கால்தடங்கள், இருப்பிடம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இந்த கணக்கெடுப்பு, வனவிலங்குகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் வாழ்விடங்களின் நிலையை மதிப்பிட உதவுகிறது.

மேலும் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் யானைகள் மற்றும் புலிகள் போன்ற விலங்குகளின் முக்கிய வழித்தடமாகவும் உள்ளது.

சத்தியமங்கலம், ஆசனூர், தாளவாடி, பவானிசாகர், கடம்பூர், ஜீர்ஹள்ளி, விளாமுண்டி உள்ளிட்ட இடங்களில் கணக்கெடுப்பு நடக்கிறது. மாமிச உண்ணிகள், கால் தடம், சாணம், நேர்கோட்டுப்பாதை ஆகியவற்றின் மூலம் கணக்கெடுப்பு நடைபெறுகிறது. ஒரு குழுவுக்கு 4 பேர் வீதம் 75 குழுக்களாக பிரிந்து 300 வனத்துறை ஊழியர்கள் 5 நாட்கள் கணக்கெடுப்பு நடத்துகின்றனர்.




மதுரவாயல் வடக்கு பகுதி 145வது வட்டத்தில் என் வாக்கு சாவடி வெற்றி வாக்கு சாவடி என்ற தலைப்பில் பாகம் 127பாக முகவர் கூட்டம் பகுதி கழக செயலாளர், மண்டலக்குழு தலைவருமான நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் 145 வட்ட செயலாளர் நெற்கை ப.ஆலன் தலைமையில் நடைபெற்றது.இந்தக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியன் தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார். கூட்டத்தில் காரம்பாக்கம் க. கணபதி எம் எல் ஏ, தொகுதி பார்வையாளர் பி.டி. பாண்டிசெல்வம், பகுதி அவைதலைவர் ஆர். கர்னல் என்.பாபு உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் பங்கேற்றனர்.